IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, ULUNDURPET

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII , Code of Criminal Procedure)

**CC. 1230/2025 Date : 03.06.2026 P.W.5 / LW.7**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ஜாபர் | ஆதார்எண் | |
| தந்தை பெயர் | அப்துல் ஜப்பார் | தொழில் | காவல் சிறப்பு உதவி ஆய்வாளர் |
| கிராமம் | உளுந்தூர்பேட்டை | வயது | 52 |
| 1ம் எதிரி ஆஜர். 2, 3 எதிரிகள் ஆஜர் இல்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. வழக்கறிஞர் ஆஜர். | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873.

**முதல் விசாரணை**

நான் தற்போது உளுந்தூர்பேட்டை காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். அதே காவல் நிலையத்தில் பணிபுரிந்த காவல் உதவி ஆய்வாளர் **திரு.அன்பழகன்** என்பவருடன் நான் பணிபுரிந்த வகையில் அவரது கையெழுத்தும் கையொப்பம் எனக்கு தெரியும் என்பதால் ஆவணங்கள் அடிப்படையில் நான் சாட்சியம் அளிக்கிறேன். உதவி ஆய்வாளர் **திரு.அன்பழகன்** அவர்கள் நிலைய பொறுப்பில் இருந்தபோது **1 04.04.2025 ம்** தேதி 08.30 மணிக்கு **மணிகண்டன் த/பெ உத்திரகுமார்** என்பவர் கொடுத்த புகாரை பெற்றார். அந்த புகார் **அ.சா.ஆ.4** ஆகும். நிலைய குற்ற எண். **206/2025 BNS** .பிரிவுகள் **296(b), 115(2), 118(1), 351(3) ன் படி** முதல் தகவல்அறிக்கை தயார் செய்தார். அவர் தயார் செய்த முதல் தகவல்அறிக்கை **அ.சா.ஆ.5** ஆகும். பின்னர் அவர் சம்பவம் இடம் சென்று லட்சுமணன், அய்யப்பன் ஆகியோர் முன்னிலையில் பார்வை மகசர் மற்றும் மாதிரிவரைபடம் தயார் செய்தார். அவர் தயார் செய்த பார்வை மகசர் **அ.சா.ஆ.6** ஆகும். மாதிரிவரைபடம் **அ.சா.ஆ.7** ஆகும். பின்னர் எதிரி குற்றம் புரிந்துள்ளார்கள் என்பதை கண்டு எதிரிகளை தேடி சென்றதில் 04.04.2025 அன்று 11.30 மணிக்கு உளுந்தூர்பேட்டை டோல்கேட் அருகில் நின்றிருந்த அவர்களை காரணம் கூறி கைது செய்து திரேக பரிசோதனை செய்து வழிக்காவல் மூலம் நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தார். பின்னர் சம்பவ சாட்சிகளான மணிகண்டன், அரிகரன், பரத்ராஜா ஆகியோர்களை தனித்தனியே விசாரணை செய்தும், பார்வை மகசர் சாட்சிகளை தனித்தனியே விசாரணை செய்தும் வாக்குமூலம் பதிவு செய்தார். பின்னர் சாட்சிகளை விசாரித்ததில் இவ்வழக்கின் சட்டப்பிரிவான BNS .பிரிவுகள் 296(b), 115(2), 118(1), 351(3) என இருந்ததை ஒரு பிரிவு மாற்றம் செய்து BNS .பிரிவுகள் 296(b), 115(2). 351(3). 131 ன் படி ஒரு பிரிவு மாற்றல் அறிக்கை தாக்கல் செய்தார். **அந்த பிரிவு மாற்றல் அறிக்கை அ.சா.ஆ. 8 ஆகும். பின்னர்** எதிரிகள் மீது **BNS** .பிரிவுகள் **296(b), 115(2). 351(3). 131 ன் படி** புலன்விசாரணை மேற்கொண்டு இறுதிஅறிக்கை

தாக்கல் செய்தார்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

நான் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரிதான். இவ்வழக்கின் விசாரணை அதிகாரி அ.சா.1 கொடுத்த பொய்யான புகாரை பெற்று சாட்சிகளை சரிவர விசாரணை செய்யாமலும், சம்பவ இடம் செல்லாமலும் வரைபடம் மற்றும் மகசர் சாட்சிகளை காவல்நிலையத்திலேயே விசாரணை செய்து எதிரிகள் மீது பொய்யான இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்று சொன்னால் அது சரியல்ல. எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்று சொன்னாலும் சரியல்ல.

மறுவிசாரணை – இல்லை.

Typed by Typist – E.Veeramani

Taken down by me certified that this contains a true and correct statement made by the accused/witness read over and admitted by him/her to be correct.

V GOMATHI

Digitally signed by V GOMATHI
Date: 2026.06.03 14:41:23 +0530

Judicial Magistrate-I,
Ulundurpet.